I.A.No.3-2024 in O.S.No.113-2023
Date:11.07.2025

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**

**முன்னிலை: செல்வி.சு.அபூர்வா, பி,ஏ., எல்.எல்.பி.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, பழனி.**

**2025–ம் ஆண்டு ஜுலை மாதம், 11–ஆம் தேதி, வெள்ளிக்கிழமை**

**இ.ம.எண்.3/2024**

in

**அ.வ.எண்.113/2023**

1. நாகராஜ்
2. மாரிமுத்து
3. முருகவேல் ... மனுதாரர்கள்/1, 6, 23 ஆம் பிரதிவாதிகள்

**– எதிர் –**

குப்பம்மாள் ....எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனுவானது கடந்த 24.06.2025 ஆம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.R.மாரப்பன், M.Sc,B.L.,** அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.K.கிருத்திகா, B.Sc,B.L.,** அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், நாளது தேதி வரை இந்த நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று வழங்கும்...

**உத்தரவு**

எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள அசல் வழக்குரையை நிராகரிப்பு (Reject) செய்து உத்தரவிடக் கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் **கட்டளை 7 விதி 11 –ன்** படி மனுதாரர்களால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம் :**

2.1. 1ஆம் மனுதாரர் அசல் வழக்கில் 1ஆம் பிரதிவாதி என்றும், எதிர்மனுதாரர்/வாதி வழக்கு சொத்துக்களைப் பொறுத்து 1 முதல் 6 பிரதிவாதிகளாகிய மனுதாரர்கள் எந்தவித வில்லங்க விவகாரங்களோ, எந்தவித பரிவர்த்தனையும் செய்யக் கூடாதென ஒரு நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்க வேண்டும் என்றும், 29 ஆம் பிரதிவாதி வழக்குச் சொத்துக்களைப் பொறுத்து UDR பட்டாவை மட்டும் வைத்துக் கொண்டு எந்த ஒரு பரிவர்த்தனையும் செய்யக் கூடாதென ஒரு நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் பிறப்பிக்கக் கோரியும், அசல் வழக்கை இந்த மனுதாரர்கள் மற்றும் மற்ற பிரதிவாதிகள் மீதும் தாக்கல் செய்துள்ளார் என்றும், எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கு சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள வழக்கில் எவ்வகையிலும், எதிர்மனுதாரருக்கு வழக்குமூலம் எதுவும் ஏற்படவில்லை என்றும், மேலும், எதிர்மனுதாரரால் தாக்கல் செய்துள்ள வழக்கு காலவரையரைச் சட்டப்படி தடை செய்யப்பட்ட வழக்காகும் என்றும், அசல் வழக்கில் எதிர்மனுதாரருக்கு உள்ள உரிமை பாத்தியம் பற்றி எவ்வித மூலக்கூறுகளும், வழக்கில் தாக்கல்

செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் 2 முதல் 14 வரையிலான ஆவணங்கள் நகல் ஆவணங்களாகும் என்றும், மேலும் வழக்குடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் நகல் மனுதாரர்களுக்கு சார்பு செய்யப்படவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

2.2. அதனைத் தொடர்ந்து, எதிர்மனுதாரருக்கு வழக்குச் சொத்தில் எவ்வகை உரிமை என்றோ, எவ்வளவு பங்கு பாத்தியம் என்றோ வழக்கில் குறிப்பிடவில்லை என்றும், மேலும் எதிர்மனுதாரருக்கு வழக்கு சொத்தில் அவரது அனுபவத்திற்கான ஆவணங்களையோ, தாக்கல் செய்யவில்லை என்றும், வழக்குச் சொத்துக்களின் மதிப்பு குறைவாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்குச் சொத்துக்களைப் பொறுத்து, 7, 8, 9 ஆம் பிரதிவாதிகள் பெற்ற கிரையத்தை எதிர்மனுதாரர் ஒப்புக் கொண்டுள்ளதோடு, அதனைப் பொறுத்து எவ்வித பரிகாரத்தையும் எதிர்மனுதாரர் கோரவில்லை என்பதிலிருந்தே வாதிக்கு வழக்குச் சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்பதையும், அசல் வழக்கில் வழக்கு மூலம் எதுவும் இல்லை என்பதையும் எதிர்மனுதாரர் மறைமுகமாக ஒப்புக்கொள்கிறார் என்றும் கூறப்பட்டுள்ளது.

2.3. அதனைத் தொடர்ந்து, எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கில் 1 முதல் 6 பிரதிவாதிகளுக்கு வழக்கு நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பட்டா ஏற்பட்டு அவர்களது அனுபவத்தில் இருப்பதை எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், அவ்வகையில் வழக்கு சொத்துக்களில் எதிர்மனுதாரருக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றும், அதனால் வழக்கில் எதிர்மனுதாரருக்கு வழக்கு மூலம் எதுவும் ஏற்படவில்லை என்றும், மேலும், வழக்கில் எதிர்மனுதாரர், அவரும் பிரதிவாதிகளும் வழக்கு சொத்துக்களில் பங்குதாரர்கள் என

குறிப்பிட்டுள்ளார் என்றும், அவரது கூற்றுப்படி பார்த்தாலும், பிரதிவாதிகள் வழக்குச் சொத்துக்களில் கூட்டு உரிமையாளர்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

2.4. அதனைத் தொடர்ந்து, கூட்டு உரிமையாளர்களுக்கு எதிராக சட்டப்படி உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி வழக்குத் தாக்கல் செய்ய முடியாது என்றும், ஆக எதிர்மனுதாரரின் வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், வாதியின் வழக்கு நிராகரிப்பு செய்யக்கூடியது என்றும், அதனால் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கை நிராகரிப்பு செய்து உத்திரவிட வேண்டும் என்று மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம் :**

3.1. எதிர்மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், UDR பட்டா என்பது சட்டத்தின் படி ஏற்றுக்கொள்ள தக்கதல்ல என்பது சட்டநிலைப்பாடாகும் என்றும், வழக்கில் வழக்கு மூலம் இல்லை என்று மனுதாரர் கூறுவது சட்டப்படி சரியல்ல என்றும், வழக்குச் சொத்துக்கள் எதிர்மனுதாரரின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் என்றும், மேற்படி சொத்துக்களில் எதிர்மனுதாரருக்கும் பங்கு பாத்தியம் உள்ளது என்றும், இதுவரை எதிர்மனுதாரரின் குடும்பத்திற்குள் பாகப் பிரிவினை ஏற்படவில்லை என்றும், வழக்குச் சொத்துக்கள் பிரிக்கப்படாமல் பொதுவில் இருந்து வருவதால் சரியான வகையில் நீதிமன்ற முத்திரை கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என்றும், ஏற்கனவே கிரையம் பெற்றவர்கள் மீது வழக்கு தொடுத்து மேற்படி வழக்கு முடித்து வைக்கப்பட்டது என்றும், அதன் அடிப்படையில் பார்த்தாலே வழக்குச் சொத்துக்கள் இன்றளவும்

பொதுவில் இருப்பது தெளிவாகும் என்றும், ஏற்கனவே நீதிமன்றம் இந்த வழக்குக்கு ஆதரவாக இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கப்பட்ட நிலையில் பிராதின் சங்கதிகளையும் பிரதிவாதிகளின் சங்கதிகளையும் தீர விசாரித்த பின்பே நீதிமன்றம் சரியான தீர்ப்பு வழக்குவது என்பது இயற்கையின் நிலைப்பாடாகும் என்றும், வழக்கை கால தாமதம் செய்யும் நோக்கத்துடன் மனுதாரர்கள் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், எனவே, இந்த மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

4. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டது.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், "மனுதாரர் கோரிய படி மனுவை அனுமதிக்க வேண்டுமா என்பது ஆகும்."

**6. <u>தீர்வு</u>** :

6.1. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள அசல் வழக்குரையை நிராகரிப்பு செய்ய வேண்டும் என்று மனுதாரரர்களால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 11ஐ பரிசீலிக்கையில் **Order VII Rule 11: Rejection of plaint -** The plaint shall be rejected in the following cases:—

(a) where it does not disclose a cause of action;

(b) where the relief claimed is undervalued, and the plaintiff, on being required by the Court to correct the valuation within a time to be fixed by the Court, fails to do so;

(c) where the relief claimed is properly valued, but the plaint is returned upon paper insufficiently stamped, and the plaintiff, on being required by the Court to supply the requisite stamp-paper within a time to be fixed by the Court, fails to do so;
(d) where the suit appears from the statement in the plaint to be barred by any law;
(e) where it is not filed in duplicate;
(f) where the plaintiff fails to comply with the provisions of rule 9: **என்று கூறப்பட்டுள்ளது. மேற்படி விதியின் கீழ் அசல் வழக்கானது வழக்குமூலத்தை வெளிப்படுத்தப்படவில்லை என்றாலோ அல்லது குறைவாக மதிப்பீடு செய்யப்பட்டு நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டிருந்தாலோ, அதுகுறித்து உரியகாலத்திற்குள் நீதிமன்றகட்டணம் செலுத்தப்படவில்லை என்றாலோ மற்றும் வழக்கானது வேறுசட்டத்தின்படி தடைசெய்யப்பட்டிருந்தாலோ, வழக்குரையின் நகலை தாக்கல் செய்யவில்லை என்றாலோ, அதேபோல் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 7 விதி 9-ஐ பின்பற்றி வழக்குரை தாக்கல் செய்யப்படவில்லையென்றாலோ வழக்குரையை நிராகரிக்கப்படலாம் என்பது தெரியவருகிறது. உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 7 விதி 11-ன் கீழ் தாக்கல் செய்த மனுவை தீர்மானிப்பதற்கு வழக்குரையின் சங்கதிகளை மட்டுமே கருத்தில்கொண்டு முடிவு செய்யவேண்டும் என்பது சட்டப்படியான நிலைப்பாடாகும். மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் Astral Cables Vs. The NSCI Corporation Ltd.,** 2011 (7) MLJ 438 (DB) **என்ற வழக்கில்**, "while considering the rejection of plaint under order 7 Rule 11 CPC, the strength or weakness of the plaintiff’s case is not to be see and what is required to be disclosed by the plaintiff is clear right to sue” **என்று கூறப்பட்டுள்ளது.**

6.2. **மனு மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில்**,

அசல் வழக்கானது வழக்குச் சொத்தை 1 முதல் 6 பிரதிவாதிகள் எவ்வித வில்லங்க விவகாரங்களோ எவ்வித பரிவர்த்தனையோ செய்யக்கூடாது என்றும் 29ம் பிரதிவாதி அலுவலகத்தில் தாவாச் சொத்துக்களை **UDR** பட்டாவை மட்டும் வைத்து எவ்வித பரிவர்த்தனையும் செய்யக்கூடாது என்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் வழக்குச் சொத்துக்களைப் பொறுத்து, 7, 8, 9 ஆம் பிரதிவாதிகள் பெற்ற கிரையத்தை எதிர்மனுதாரர் ஒப்புக் கொண்டுள்ளதோடு, அதனைப் பொறுத்து எவ்வித பரிகாரத்தையும் எதிர்மனுதாரர் கோரவில்லை என்பதிலிருந்தே வாதிக்கு வழக்குச் சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்பதையும், அசல் வழக்கில் வழக்கு மூலம் எதுவும் இல்லை என்று வாதிடப்பட்ட நிலையில், மேற்படி, 7, 8, 9 பிரதிவாதிகள் வாதி மீதும் 25 வது பிரதிவாதி மீதும் அசல் வழக்கு எண்.91/2022ன் கீழ் வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கில் நீதிமன்றத்திற்கு வெளியே சுமுகமான முறையில் பேசி முடிவு செய்து வாதிக்கும் 2வது பிரதிவாதிக்கும் மட்டுமல்லாது பிற வாரிசு தாரர்களின் பெயரை பட்டாவில் சேர்த்த பின்பு திருத்தல் பத்திரம் செய்து கொள்ளலாம் என்று பேசி முடிக்கப்பட்டது என்றும், எனவே, மேற்படி நபர்கள் மீது ஆவணங்கள் பதியப்பட்டுள்ளதால் அவர்கள் அவசியமான தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் எனவே 7, 8, 9 பிரதிவாதிகள் மீது எந்த பரிகாரமும் கோரவில்லை என்றும், வழக்குரையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

6.3. மனுதாரர் தரப்பில், அசல் வழக்கில் எவ்வகையிலும் எதிர்மனுதாரர்/வாதிக்கும் வழக்கு மூலம் எதுவும் ஏற்படவில்லை என்று வாதிடப்பட்ட நிலையில், வாதி வழக்குரையில் குறிப்பிட்டுள்ளது போல்

தாவா சொத்தானது கருப்பன் மாதாரி என்பவரால் ஆவண எண்.1536/1960 ன் படி கிரையம் பெற்ற சொத்து என்பதையும் கருப்பன்மாதாரிக்கு பச்சத்தான், பொன்னம்மாள் (எ) பொன்னாத்தாள், பழனி, ஆரான், கமலா, மனுதாரர்/வாதி குப்பம்மாள், பெருமாள் ஆகியோர்கள் வாரிசுகள் ஆவார்கள் என்பதும் தாவா சொத்தை கருப்பன் மாதாரி கிரையம் பெற்ற காலத்தில் இருந்து இறக்கும் வரை பொதுவாக வைத்து அனுபவித்து வந்து கருப்பன்மாதாரி இறந்த பின்பு தாவா சொத்தை கருப்பன்மாதாரி வாரிசுகளுக்குள் ஊர் பெரியோர்கள் முன்னிலையில் அக்கால முறைப்படி வாய்க்கிரால் பாகப்பிரிவினை செய்து கொண்டு அனுபவித்து வந்தனர் என்பதும், **UDR** பட்டாவில் தவருதலாக ஆண் வாரிசுகள் பெயரான பச்சாத்தான், பழனி, ஆரான், பெருமாள் மற்றும் கருப்பன், மாதாரி பெயர்களில் பட்டா பெற்ற விவரம் அறிந்தவுடன் வாதி பழனி வட்டாட்சியர், பழனி கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சியர் ஆகியோரிடம் மனு கொடுத்து சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்து வந்தார் என்பதும், அதன் விளைவாக அசல் வழக்கினை வாதி தாக்கல் செய்துள்ளார் என்பதும் தெளிவாகிறது. எனவே, வாதிக்கு வழக்கு மூலம் ஏற்படவில்லை என்ற மனுதாரர் வாதம் ஏற்புடையதல்ல.

6.4. மேலும், அசல் வழக்கானது காலவரையறைச் சட்டத்தால் தடைசெய்யப்பட்ட வழக்கு என்றும், வாதியின் வழக்கு சட்டப்படி தடைசெய்யப்பட்ட வழக்கு **(Barred by law)** என்றும், மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்ட நிலையில் எதன் அடிப்படையில் அசல் வழக்கானது காலவரையறைச் சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், எந்த சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்ட வழக்கு என்பது குறித்து மனுவிலோ மனதாரர் தரப்பு வாதத்தின் போதோ கூறப்படவில்லை. தாவா

சொத்துக்களின் மதிப்பு குறைவாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என்று மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்ட நிலையில் எதிர்மனுதாரர்/வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் மேற்படி பரிகாரத்திற்கு சரியாக மதிப்பீடு செய்து அதற்கான நீதிமன்ற முத்திரை கட்டணம் செலுத்தியுள்ளார் என்பதை அறிய முடிகிறது. மேலும், வாதி/எதிர்மனுதாரருக்கு தாவா சொத்தில் எவ்வகை உரிமை என்றோ எவ்வளவு பங்கு பாத்தியம் என்றோ பிராதில் குறிப்பிடவில்லை என்றும், எதிர்மனுதாரர்/வாதிக்கு தாவா சொத்தில் அவருக்குரிய உரிமைக்கான ஆவணங்களையோ தாவா சொத்தில் அவரது அனுபவத்திற்கான ஆவணங்களையோ தாக்கல் செய்யவில்லை என்று மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்ட நிலையில், தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றும், அதில் எதிர்மனுதாரருக்கு பங்கு பாத்தியம் உள்ளது என்றும், **UDR** பட்டா என்பது சட்டத்தின் படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும், மனுதாரருக்கு பாகம் உள்ளதாக கூறப்படும் சொத்தில் **UDR** பட்டாவை வைத்து வழக்குச் சொத்தை பிரதிவாதிகள் வில்லங்கப்படுத்த முயற்சி செய்கிறார்கள் என்றும், எதிர்வாதம் முன்வைக்கப்பட்டது. மேற்படி சங்கதிகள் உரிய வழக்கு விசாரணையின் மூலமே முடிவு செய்ய முடியும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் ***R. Perumal Naickar Vs. R. Sakrapaani*** *(2013) 6 MLJ 119* என்ற வழக்கில்

> *“ It is to be noted that under **Order VII Rule 11 of CPC,** there is a requirement of inclusion of cause of action. Ordinarily, a court of law is to presume that every allegation in the plain is true. As a matter of fact, when the plaint raises arguable points which requires deeper deliberation and scrutiny, the same cannot be rejected in the eye of law. Also that a plaint cannot be rejected under **Order VII Rule 11 of CPC,** where the suit is required to be heard on merits after taking evidence in a given case.*

> *However, if the averments made in the plaint and the documents relied upon establish the cause of action, then the plaint shout not be merely rejected based on the reason that the averments are not enough to prove the facts mentioned therein."*

என்று கூறப்பட்டுள்ளது.

6.5. வழக்குரை, ஆவணங்கள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு மாண்பமை உயர்நீதிமன்ற முன் தீர்ப்புகளின் அடிப்படையில், அசல் வழக்கானது, நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் வழக்குச் சொத்தில் மனுதாரருக்கு பாகம் உள்ளதா ? இல்லையா ? வழக்குச் சொத்தைப் பொறுத்து வழங்கப்பட்ட UDR பட்டா சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதா ? இல்லையா ? வழக்குச் சொத்து மனுதாரருடைய அனுபவத்தில் உள்ளதா ? வழக்குச் சொத்தைப் பொறுத்து மனுதாரர் கோரும் பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கத்தக்கதா ? இல்லையா? என்பதும், தவா சொத்தில் வாதிக்குரிய பாத்தியம் மற்றும் அனுபோகத்தை குறித்து வழக்கின் முழு விசாரணைக்கு பின்னிட்டு தான் முடிவு செய்ய இயலும் என்பதாலும், மனுதாரரின் இம்மனுவில் கூறியுள்ள காரணங்கள் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 11ன் கீழ் கூறப்பட்டுள்ள விதிவிலக்குகளின் கீழ் வரவில்லை என்பதாலும், இம்மனுவை அனுமதித்து உத்திரவிடுவது நீதியின்பால் உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

7. **இறுதியாக,** இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டு உத்திரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு

நேரடியாக சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2025 ஆம் வருடம் ஜுலை மாதம் 11 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

**(ஒம்/–சு.அபூர்வா)**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பழனி.**

**மனுதாரர்கள் தரப்பு சாட்சியங்கள் :** இல்லை

**மனுதாரர்கள் தரப்புசான்றாவணங்கள் :** இல்லை.

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் :** இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :** இல்லை.

**(ஒம்/-சு.அபூர்வா)**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பழனி.**